## பத்மனாபபுரம் வருவாய் கோட்டாட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

### முன்னிலை: திரு.பா. அருண் சத்யா. B.E.,

மு.மு. அ3/.2589/14 நாள்: 26/4.8.2014

பொருள் : பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கல்குளம் வட்டம் - கல்குளம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி. எம். மேரி கில்டா ராணி - தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான விளம்பல் ஆணை – வெளியிடல்.

பார்வை : 1. வட்டாட்சியர், கல்குளம் ந.க.எண். அ2/20535/2013

2. தொடர்புடைய ஆவணங்கள்

---------

**ஆணை:**

A2

கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வரும் திருமதி. எம். மேரி கில்டா ராணி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்யப்பட்டு 18.4.2012 பிற்பகல் முதல் அரசு பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார் தனியரின் பணி ஏற்கனவே கிராம நிர்வாக அலுவலர் நிலையில் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. இவர் தகுதிகாண் பருவகாலத்தில் முடிக்க வேண்டிய உரிய பயிற்சிகள் மற்றும் சிறப்புத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் மீது குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை. இவர் மீது குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி தண்டனை வழங்கியதாகவும் இல்லை. தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதி 38(ஆ)(iii) இணைப்பு 10 பிரிவு 7©ன்படி கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பயிற்சிகாலங்கள் தகுதிகாண் பருவத்தில் சேராது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தனியரின் ஒரு மாதக்கால நில அளவை பயிற்சிகாலம் மற்றும் 6 வாரக்கால கிராம நிர்வாகம் பயிற்சிகாலம் ஆகியன தகுதிகாண் பருவகாலத்தில் சேர்க்கப்படவில்லை. தனியர் மூன்றாண்டுகால பணிக்காலத்திற்குள் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் மற்றும் சிறப்புத்தேர்வில் தேர்ச்சி ஆகியன முடித்துள்ளார்.

2. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணிகள் பொது விதி 23(அ) 27 மற்றும் 28 ஆகியவற்றின் அடிப்படையிலும் பிற அரசு சட்டத்திட்டங்களின் அடிப்படையிலும் இவர் தனது தகுதிகாண் பருவத்தினை கீழ்கண்டவாறு முடித்துள்ளனர்.

| வ. எ. | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை படுத்திய நாள் | தகுதிகாண் பருவத்தில் தகுதியில்லாகாலம் | | சிறப்பு தேர்வில் தேர்ச்சி பெற்ற நாள் | தகுதிகாண் பருவம் முடிக்கும் நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பயிற்சி காலம் | விடுப்பு காலம் | | |
| 1. | திருமதி. எம். மேரி கில்டா ராணி, கிராம நிர்வாக அலுவலர், திருவிதாங்கோடு. | 18.04.2012 பி.ப. | 18.4.2012 பி.ப. | 04.02.2013 முதல் 05.03.2013 வரை 28.12.2013 முதல் 10.04.2013 வரை 133 நாட்கள் | - | 26.7.13 | 18.4.14 |

3. சென்னை வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண் 51/2004 நாள் 17.12.2004 தமிழ்நாடு அமைச்சுபணிகளில் இடம் பெற்றுள்ள இளநிலை உதவியாளர்களுக்கு தகுதிகாண் பரும் நிறைவு செய்ய வழங்கப்பட்டுள்ள வரையறைகளின் அடிப்படையில் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணிகள் பொது விதி 23 (அ) 27-ன்படி தனியர்கள் கீழ்வருமாறு அவர் பெயருக்கு எதிரே குறிப்பிட்ட நாளில் தகுதிகாண் பருவம் திருப்திகரமாக நிறைவு செய்ததாக விளம்பி ஆணைகள் வெளியிடப்படுகிறது.

| வ. எ. | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை படுத்திய நாள் | தகுதிகாண் பருவம் முடிக்கும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. எம். மேரி கில்டா ராணி, கிராம நிர்வாக அலுவலர், திருவிதாங்கோடு. | 18.04.2012 பி.ப. | 18.04.2012 பி.ப. | 18.04.2014 |

4. தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள கல்குளம் வட்டாட்சியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

வருவாய் கோட்டாட்சியர்
பத்மனாபபுரம்

பெறுநர்
தனியர்கள்

நகல்: வட்டாட்சியர்
கல்குளம் – சம்மந்தப்பட்ட
நபருக்கு சார்பு செய்து திரும்ப அனுப்பிடவேண்டும்.

நகல்: மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: அ3 இருப்பு கோப்பிற்கு.